RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s834

OPEN ACCESS

# நச்சினார்க்கினியர் வரலாறும் உரைத்திறனும்

## மு. கவிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Nachinarkiniyar History and Textual Ability

## M. Kavitha [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science & Higher Education for Women, Coimbatore-641043, Tamil Nadu, India

* Corresponding Author: kavithasampath.m@gmail.com

Received: 11-04-2021
Revised: 03-05-2022
Accepted: 07-05-2022
Published: 21-07-2022

Check for updates

### ABSTRACT

Tamil language and literature have flourished with speeches composed by speechwriters. Are greatly aiding researchers who think innovatively. Texts serve as a bridge between linguistic research and e-literary criticism. The texts convey how the Tamil language has changed over time, as well as the living conditions, political changes and customs of the Tamil people. This article explores the history and textual ability of Nachinarkiniyar. Nachinarkiniyar was a knowledgeable and knowledgeable man of various arts, writing semantics for songs, and also possessing the art of religious ideas, music, drama, etc., which are included in the book. He is well versed in grammar, literature, dictionary, epic and puranam in Tamil. He is well versed in astrology, medicine, architecture, and crops. Nachinarkiniyar, who has written for Tamil grammar books, is well versed in the Vedic and phylogenetic theory of Sanskrit and is a university-oriented scholar of Tamil, Sanskrit scholarship, religious knowledge, land book knowledge, life and biology. This article explores the history and textual ability of Nachinarkiniyar.

**Keywords:** Nachinarkiniyar Text, History, Textual Ability, Research Efficiency, Linguistic Research,

## முன்னுரை

நச்சினார்கினியர் இலக்கணம் இலக்கியம் ஆகிய இருவகை நூல்களுக்கும் உரை எழுதிய சான்றோர். தலைச்சிறந்த தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை கண்டவர். உரையாசிரியர்களுள் மிகச் சிறந்தவர் என்ற பெருமையுடன் மேலோங்கி நிற்பவர். பல நூறு ஆயிரம் பாடல்களை மனப்பாடமாகக் கொண்ட திறனும் பிறழாத நினைவாற்றலும் கலைச் சுவையுடன் அழகிய உரைநடை எழுதும் வன்மையும் கொண்டவர். பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் சங்க இலக்கியத்துள், பத்துப்பாட்டு கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை குறுந்தொகையில் இருபது பாடல்கள் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி ஆகிய சிறந்த நூல்களுக்கு நச்சினார்கினியர் உரை கண்டுள்ளார். உழைப்பின் திருவுருவாய் நுண்ணறிவின் இருப்பிடமாய் இலக்கிய ஆராய்ச்சியின் பிறப்பிடமாய் நச்சினார்க்கினியர் விளங்குபவர். நச்சினார்க்கினியர் வரலாறும் உரைதிறனும் குறித்துஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நச்சினார்க்கினியர் வரலாறு

நச்சினார்க்கினியர் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில் வாழ்ந்து வந்தவர். ஆசிரியர் பணியை அறப்பணியாக மேற்கொண்டிருந்தவர். பாரத்துவாச கோத்திரத்தவர். பார்ப்பன மரபினர். சிவஞானசெல்வர் என்ற குறிப்புகளைப் பாயிரத்தின் மூலம் அறியமுடிகிறது. நச்சினார்க்கினியர் வரலாற்றினை அறிய உரைச் சிறப்புப் பாயிரம் துணைபுரிகின்றது. இதனை

"வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்எண்டிசை விளங்க வந்த ஆசான்

பயின்ற கேள்வி பாரத்து வாசன்

நன்மறை துணிந்த நற்பொரு ளாகிய

தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்

தானே யாகிய தன்மை யாளன்

நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்".

என்ற பாயிரப்பகுதி நச்சினார்க்கினியனின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக உணர்த்துகின்றது (Ilampuranar, 2005). இவரது கல்வி மாண்பினை

"பாற்கடல் போலப் பரந்த நன்னெறி

நோட் போடுவான்பொருள் நுண்ணிதின் உணர்ந்த

போக்கறுகேள்விப் புலவோர் புலத்தின்

நாற்பொருள் பொதிந்ததாக்கமையாப்பினைத்

தேக்கிய சிந்தையன்"

என்று பாயிரம் பாராட்டுகின்றது (Ilampuranar, 2005).

## நச்சினார்க்கினியர் உரை நூல்கள்

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட்டுங் கலியும்

ஆர குறுந்தொகையுள் ஐந்நான்கும்-சாரத்

திருத்தகுமாமுனி; செய்சிந்தாமணியும்

விருத்தி நச்சினார்க் கினியமே".

என்ற வெண்பா நச்சினார்க்கினியர் உரை கண்ட நூல்களை குறிப்பிடுகின்றது (Ilampuranar, 2005). இவற்றுள் குறுந்தொகை உரைகிடைக்கவில்லை. நச்சினார்க்கினியர் நீண்டநாள் வாழ்வாங்கு வாழ்ந்து தம் வாழ்நாளின் பெரும்பகுதியை சிறந்த நூல்களைக் கற்பதிலும் உரை எழுதுவதிலும் கழித்திருக்க வேண்டும். உரை எழுத எடுத்துக் கொண்ட நூல்களையும் அவற்றுக்குரிய உரைகளையும் பலமுறை பயின்று பயின்று தெளிவு பெற்றிருக்க வேண்டும். நூல்களுக்கு உரை இயற்ற தொடங்கும்முன் தமிழ் மொழியிலுள்ள பல நூல்களை ஆழ்ந்து பயின்று புலமை பெற்றுள்ளார். இலக்கண இலக்கியங்களையே அல்லாமல் ஏனைய கலைகளிலும் நிரம்பிய அறிவு பெற்றுள்ளார். மக்களின் வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து உலக அறிவு பெற்றுள்ளார். வடமொழியிலுள்ள சிறந்த நூல்களில் தோய்ந்து மகிழ்ந்துள்ளார். இவர் தனிநூல் எதுவும் இயற்றவில்லை. பண்டைய தமிழ் நூல்களுக்கு நல்லுரை வழங்குவதையே செம்மையாகச் செய்தார்.

## உரையின் இயல்பு

நச்சினார்க்கினியர் தம் உரையில் தெளிவும் விளக்கமும் அமையுமாறு எழுதியுள்ளார்.

தேவையான இடங்களில் இலக்கணம் கூறிவினை முடிபுகளைக் கூறி விளக்குவார். சிறந்த மேற்கோள்களைத் தந்துள்ளார். தாம் உரை எழுத எண்ணிய நூல் பிற சமயத்தைச் சார்ந்தது எனினும் அச்சமயத்தையும் நூலாசிரியர் கொள்கைகளையும் நன்குஅறிந்துஎழுதும் திறன் பெற்றவர்.

## பத்துப்பாட்டுஉரை

பத்துப்பாட்டில் ஒன்றாகிய சிறுபாணாற்றுப்படையின் முதல் இரண்டு அடிகள் (Rasamanikanar, 2003)

"மணிமலை பணைத்தோள் மாநில மடந்தை

அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம் போல"

என்பவையாகும் (Thirugnanasambandam, 2014a). இவ்வரிகளை நச்சினார்க்கினியர்

"பணைத்தோள் மாநிலமடந்தைமணிமலை

அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம்போல"

என்று சொற்களை முன் பின்னாகத் தம் விருப்பம் போல் மாற்றிப் பொருள் எழுதுகின்றார். பாட்டு இயற்றிய புலவரின் கருத்தை அறவே புறக்கணித்து விட்டுத் தம் கருத்தைப் புகுத்தி விடுதலும் உண்டு. முல்லைப்பாட்டில் தலைமகளை ஆற்றுவிக்கக் கருதி பெருமுதுபெண்டிர் நற்சொற் கேட்கும் நிகழ்ச்சியை

"நெல்லோடு

அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது

பெருமுது பெண்டிர் கேட்பவிரிச்சிகேட்ப"

என்று நப்பூதனார் கூறுகின்றார் (Balasubramanian, 2004b). ஆனால் நச்சினார்க்கினியர் போர் மேற்செல்ல விரும்பும் மன்னனின் படைத்தலைவர் ஏவலால் நற்சொல் கோடற்கு உரியவர். நற்சொல் கேட்டு நின்றனர் என்று கருத்தைப் பாட்டில் ஏற்றிக்கூற சொற்களை முன் பின்னாக மாற்றுகின்றார்.

## இலக்கணஉரை

இலக்கண சூத்திரங்களுக்கு உரை எழுதும் போதும் இவர் தம் கருத்தையே புகட்டுகிறார். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில்

"மருவின் தொகுதிமயங்கியல் மொழியும்" (Thirugnanasambandam, 2014a)

எனத் தொடங்குகின்ற நூற்பாஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளுமாறு அமைந்திருப்பினும் அவ்வாறு பொருள் கொள்ளாமல் மேற்காட்டிய அடியை மறுமொழியும் என்றும், இன் தொகுதி மயங்கியல் மொழியும் என்றும் இரு வகையாகப் பிரித்துப் பொருள் கூறுகின்றார் (Puliyur Kesikan, 2016). யகர மெய்யின் பிறப்பை விளக்குகின்ற போது

"அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை

கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்

என்னும் நூற்பாவை மாற்றியமைத்து

எழு வளிமிடற்றுச் சேர்ந்த இசை

அண்ணங் கண்ணுற்றுஅடைய யகாரம் பிறக்கும்"

என்று பொருள் மாற்றிக் கூறுகின்றார் (Thirugnanasambandam, 2014b, Ilampuranar, 2005).

## ஆராய்ச்சித் திறன்

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் 99 வகையான பூக்களைக் குறிப்பிடுகின்றார். அப்பூக்களை எல்லாம் தலைமகளும் தோழியும் பறித்துக் கொண்டு வந்து பாறையிலே குவித்து மாலை தொடுத்துத் தம்தலையில் சூட்டிக் கொண்டதாய் புலவர் பாடியுள்ளார். ஆப்பூக்கள் யாவும் குறிஞ்சிநிலத்திற்கு மட்டும் உரியவை அல்ல. ஐவகை நிலங்களுக்கும் உரியவை. அவை யாவும் ஓரிடத்தில் இருந்தன என்பது பொருந்தாது. மேலும் அப்பூக்கள் ஒரு காலத்தில் பூப்பனவும் அல்ல. வேனிற்காலத்தில் சிலவும் கார்காலத்தில் சிலவும் பனிக்காலத்தில் சிலவும் பூப்பன. அவை யாவும் ஒரே காலத்தில் பூத்திருந்தன என்பதும் பொருந்தாது. எல்லாப்பூக்களும் ஒரே நேரத்தில் பூப்பதும் இல்லை. காலையில் சிலவும் நண்பகலில் சிலவும் மாலையில் சிலவும் நள்ளிரவில் சிலவும் பூக்கும் இயல்புடையவை. இவ்வாறு நிலம் பெரும்பொழுது சிறுபொழுதுஆகிய மூன்றினாலும் ஒற்றுமைப்படாத பூக்கள் ஓரிடத்தில் ஒருகாலத்தில் ஒருநேரத்தில் பூத்திருந்தன என்று கூறுவது பொருந்தாது. நச்சினார்க்கினியர் இவற்றை நன்கு ஆராய்ந்து உள்ளார். தொல்காப்பியம் அகத்திணை இயலில்

“ஏந்நிலமருங்கிற் பூவும் புள்ளும்

அந்நிலம் பொழுதொடுவாரா ஆயினும்

வந்தநிலத்தின் பயத்த ஆகும்”

என்ற சூத்திரத்திற்கு உரை எழுதிய பின் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டில் வரைவு இன்றி பூ மயங்கியுள்ளது என்று மிகச் சுருக்கமாக எழுதியுள்ளார். இதன் மூலம் அவரது ஆராய்ச்சித் திறன் வெளிப்படுகிறது (Thirugnanasambandam 2014b).

## இலக்கியப்புலமை

இலக்கியங்கள் பலவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து கற்ற நச்சினார்க்கினியர் நினைவாற்றலோடு ஆராய்ந்து அவற்றை ஏற்ற இடங்களில் கூறி விளக்குகின்றார். தொல்காப்பியம் சிந்தாமணி போன்ற நூல்களுக்கு உரை எழுதும் போதுஅவற்றை முன்னும் பின்னும் சிங்க நோக்காக கண்டு முழு நோக்கு உடையவராக விளக்குகின்றார். சீவகசிந்தாமணிக்கு உரை எழுதும் போது முழு கதையையும் நினைவில் கொண்டு எழுதுகின்றார். முழு நோக்குடனே காண்கின்றார். பின்னால் வரும் நிகழ்ச்சியையும் முன்னே நடந்ததையும் சுட்டிக் காட்டுகின்றார். சிந்தாமணி காப்பியத்தை இவர் பலமுறை பயின்றுதெளிவு பெற்றிருந்தார். இவர் இலக்கியஉரையில் இலக்கணத்தை நினைவூட்டுவார். இலக்கண உரையில் இலக்கியத்தை நினைவூட்டுவார். தம் உரைகளையே பல இடங்களில் சுட்டிக் காட்டி நினைவூட்டுவார்.

## சீவகசிந்தாமணிஉரை

நச்சினார்க்கினியர் தம் புலமை கொண்டு உழுது பயன் கண்ட விளை நிலங்களில் சீவகசிந்தாமணியும் ஒன்று. சிந்தாமணி என்னும் காப்பியப் பெருங்கோயில்; நச்சினார்க்கினியர் உரைஎன்னும் நந்தாவிளக்கால் பொலிவுபெறுகின்றது. அக்கோயிலின் அழகு விளக்கின் சுடரொளியால் மிகுகின்றது. காப்பிய பெருங்கோயினுள் நுழைந்து காண்பவர் கண்களை நச்சினார்க்கினியர் ஏற்றி வைத்த சுடர் விளக்கு கவர்ந்து பேரின்ப மூட்டுகின்றது. சீவகசிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் இயற்றியுள்ள உரையின் திறத்தை உரைச் சிறப்புப் பாயிரம்

“திருத்தகு முனிவன் கருத்து இது என்னப்

பருப்பொருள் கடிந்து பொருள் தொடர் படுத்து

வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்”

என்று போற்றுகின்றது (Ilampuranar, 2005). நச்சினார்க்கினியர் சிந்தாமணியைச் சிறந்த இலக்கியமாகக் கருதிப் போற்றியுள்ளார். சிந்தாமணியை ஆழ்ந்து கற்று கலையழகில் ஈடுபட்டு

இலக்கியச் சுவையில் தம்மை மறந்து ஈடுபட்டுள்ளார். சீவகனை ஈயின்றி இருந்ததேன் என்று திருத்தக்கதேவர் குறிப்பிடுகின்றார். உரையாசிரியர் இதற்கு முன்பு ஒரு மகளிரும் இவனை நுகராது இருந்தமைஉணர்ந்து அங்ஙனம் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்.

"படநாகம் தோல் உரித்தாற் போல் துறந்து"

என்ற உவமைக்கு படநாகம் தோலுரித்தாரற் போல அகமும் புறமும் துறந்து என்றும் நாகம் தோலுரிக்கும் பொழுதுநஞ்சும் காலும் என்றும் விளக்கம் தருகின்றார் (Puliyur Kesikan, 2018a). இலக்கணையைச் சீவகன் அழைக்கும் போது

"கரும்பே தேனே அமிர்தமே

காமர் மணி யாழே

அரும்பாய் மலர்மேல் அணங்கே

கரும்பார் சோலை மயிலே

குயிலே சுடர் வீசும்

பெரும்பூண் மன்னன் பாவாய்

பூவாய்ப் பிணை மானே"

என்று பலவாறு பாராட்டுகிறான் (Puliyur Kesikan, 2018a). இதற்கு நச்சினார்க்கினியர் எழுதும் விளக்கம் பலமுறை கற்று இன்புறத்தக்கதாய் அமைந்துள்ளது. பல பாடல்களை ஒருதொடர் ஆக்கி உரை எழுதுவது நச்சினார்க்கினியரின் பண்பு. இவ்வாறு எழுதுவதில் சிறந்த பயன் இருப்பதாய் கருதுகின்றார்.

## தொல்காப்பியஉரை

"நச்சினார்க்கினியர்

பண்டைப் பனுவல் பல இறவாது நிலவ

உரை எழுதி ஈந்தோன்"

என பாராட்டப்பட்டவர் (Ilampuranar, 2005). இளம்பூரணருக்கு அடுத்தபடியாக தொல்காப்பியம் முழுவதற்கும் உரைசெய்தவர் நச்சினார்க்கினியர். பொருளதிகாரத்தில் உவமவியல் மரபியல் ஆகிய இடங்களைத் தவிர மற்ற எல்லா பகுதிகளுக்கும் இவரது உரை உள்ளது. முல்லைப்பாட்டு குறிஞ்சிப்பாட்டு ஆகிய பாடல்களுக்குப் பொருள் எழுதும் போது பல இடங்களில் தொல்காப்பிய நூற்பாக்களை எழுதுகின்றார் (Puliyur Kesikan, 2018b).

## முடிவுரை

தமிழ் உரைநடைவரலாறு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. புல நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்தே திட்பநுட்பம் வாய்ந்த செவ்விய உரைநடை தமிழ் மொழியில் வளர்ந்து பெருகி சிறப்பு எய்தியுள்ளது. உரைநடையை வளர்த்துச் செப்பனிட்டுப் போற்றி வந்தது உரையாசிரியர்கள் செய்த ஒப்பற்ற பணியாகும். நச்சினார்க்கினியர் நடை எளிமையும் எழிலும் உடையது. தங்கு தடையற்ற உயிரோட்டம் நிறைந்திருக்கும். நச்சினார்க்கினியரிடமிருந்தே சிறந்த உரைநடை தொடங்கியது. தமிழ் உரைநடையை வளம் பெறச் செய்தவர் என்னும் சிறப்புக்குரியவர். நச்சினார்க்கினியர் பல்கலைப் புலமை உடையவர். தமிழ் மொழியோடு வடமொழிப் புலமையுடையவர். நச்சினார்க்கினியரின் உரைத்திறன் தமிழ் உலகின் நற்பேறாகும்.

## References

Arunachalam, M., (1976) Tamil Ilakkiya Varalaru, Saradha Pathippagam, Chennai, India.

Balasubramanian, K.V., (2004a) Sirupanatruppadai, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V., (2004b) Mullaipattu, New Century Book House, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Puliyur Kesikan, (2016) Tholkappiyam, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesikan, (2018a) Seevaga Sinthamani, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesikan, (2018b) Kurinchippaattu, Paari Nilaiyam, Chennai, India.

Rasamanikanar, M., (2003) Pathupattu Aatchi, Pari Nilaiyam, Chennai, India.

Thirugnanasambandam, S., (2014) Tholkappiyam Porulathikaram, Kathir Nilaiyam, Chennai, India.

Thirugnanasambandam, S., (2014a) Tholkappiyam Ezhuthadhigaram, Kathir Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License